செய்தி வெளியீடு எண்:531 நாள்:30.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள் 2016, விதி 16 மற்றும் திருத்த விதிகள் 2018-இன்படி **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களை தலைவராக கொண்டு மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு திருத்தி அமைக்கப்பட்டு 20.07.2021 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.56, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 20.07.2021)

இக்குழுவில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவின் முதல் கூட்டம் வரும் 17.08.2021 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இதில் வன்கொடுமைக்கு ஆளானவர்களுக்கு அளிக்கப்பட்ட தீருதவி, மறுவாழ்வு மற்றும் அவை பற்றிய விவரங்கள், இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடுத்தல், சட்டத்தைச் செயற்படுத்தும் பல்வேறு அலுவலர்களின் / அமைப்புகளின் பங்கு, பணி மற்றும் மாநில அரசால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் மற்றும் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்தச் சட்டம் 2015–இல் அத்தியாயம் IV–A–இல் உள்ள பிரிவுக் கூறு 15A(11)–இன்படி வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் குறித்தும் ஆய்வு செய்யப்படவுள்ளது.

****************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9